පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 492
ආයතනයේ නම : කාන්තා සහ ළමා කටයුතු අමාත්‍යාංශය
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492
நிறுவனத்தின் பெயர் : மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 492
Name of the institution: Ministry of Women and Child Affairs
Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492
நிறுவனத்தின் பெயர் : மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

| அறிக்கையில் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகள் | குறைபாடுகளை சீராக்கல் செய்துகொள்வதற்காக நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை/தற்போதைய நிலைமை |
|---|---|
| முதலாவது பகுதி<br><br>01. இழப்புக்கள் பற்றிய ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு முதல் 2026 ஆண்டு வரை இழப்புக்கள் பற்றிய அவணம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 02. கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்திருந்த ஒவ்வொரு வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு சில கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட காலம் எடுத்துள்ள போதும், 2024.01.17 திகதியளவில் 2023 ஆம் ஆண்டு சமர்ப்பித்திருந்த சகல கணக்காய்வு வினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளன.<br>இன்றளவில் இந்த நிலைமையைத் தடுத்துக் கொள்வதற்கு சகல பிரிவுகளும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளன. |
| 03. உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்கு பதிலளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டன. | 2023 ஆண்டில் சகல உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக:கும் பதிலளிக்கப்பட்டுள்ளன. உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதங்களுக்கு பதிலளிக்குமாறு சகல பிரிவுகளும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளன. |
| 04. வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை பற்றிய சிபாரிசுகளும், ஏனைய சிபாரிசுகளும் உரிய காலப்பகுதிக்குள் அமைய அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2025.12.31 திகதிக்கு பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகளில் பெரும் எண்ணிக்கையானவை ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இறுதி சிபாரிசுகளை அமுல்படுத்துவது உட்பட பிந்திய நடவடிக்கைகள் 2026.06.30 திகதியில் பூர்த்தி செய்யுமாறு சகல பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 05. சகல வாகனங்களிலும் உரிமையை உறுதி செய்வதற்கான கடிதங்கள் இல்லை. | சகல வாகனங்களிலும் உரித்தை உறுதி செய்யும் கடித ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| 06. சகல வாகனங்களிலும் அரச சின்னம் பதிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுக்கு உரித்தான வாகனங்களின் எண்ணிக்கை 29 ஆகும். இவற்றில் 27 வாகனங்களில் அரச சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. |
| 07. ஒரு வாகனம் பயன்படுத்த முடியாதுள்ளதுடன் 8 மாதங்களுக்குக் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை புதுப்பித்து பயன்படுத்திக் கொள்வதற்காக பின்வருமாறு வேறு அரச நிறுவனங்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.<br><br>2023 ஆம் ஆண்டு WP KH 9256, WP KH 6643, WP KH 2854 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மோட்டார் கார்கள் இராணுவப் படையிடம் கையளிக்கப்பட்டன. 64-3160 ஆம் இலக்க ஜீப் வண்டி முல்லேரியா பிரதேச சபைக்கு சாட்டுதல் செய்யப்பட்டது.<br><br>2024 ஆண்டு KM 7727 ஆம் இலக்க ஜீப் வண்டி இராணுவப் படைக்கு சாட்டுதல் செய்யப்பட்டது.<br><br>2025 ஆண்டு KB 0377 மற்றும் KH 1737 ஆம் இலக்க 02 மோட்டார் கார்கள் இலங்கை பொலிஸாருக்கு சாட்டுதல் செய்யப்பட்டன. 2025 ஆண்டு WP GV 6082 மற்று 207-1449 ஆம் இலக்க முச்சக்கர வண்டி அகற்றப்பட்டது. |
| 08. நி.பி. 94(1) இற்கமைய செலவு விடயத்திற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளின் வரையறையை விஞ்சியவாறு பொறுப்புக்கள் செய்துகொள்ளப்பட்டிருந்தன. | நி.பி. 94(2) இற்கமைய வழங்கப்பட்டுள்ள வரையறைகளுக்குள் கடப்பாடுகள் செய்துகொள்ளப்பட்டுள்ளன. |
| 09. உரிய காலப்பகுதிக்கு புறம்பாக ஏற்பாடுகள் வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. | 2021.08.02 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் கடித இலக்கம் DMA/AMC/SM/2020/01 இற்கமைய இரண்டாம் காலாண்டின் இறுதிக்கு முன்னர் கடப்பாடுகளை செய்துகொள்வதற்கான கடிதங்களை கணக்குகள் பிரிவிடம் சமர்ப்பிக்குமாறு குறித்த பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

<table>
<tr>
<td>10. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது.</td>
<td>2023 ஆண்டு காணப்பட்ட ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் நிலுவை பின்வருமாறு தீர்க்கப்பட்டுள்ளன.<br><br>
<table>
<tr><td>அலுவலரின் பெயர்</td><td>தொகை</td><td>தீர்க்கப்பட்ட திகதி</td></tr>
<tr><td>பீ.பீ.ரீ. அப்ஸரா</td><td>ரூ. 3,750.00</td><td>2026.01.02</td></tr>
<tr><td>பீ.எல்.பீ.சீ. லியனகே</td><td>ரூ.85,394.00</td><td>2024.12.27</td></tr>
<tr><td>பீ.ஏ.பீ.டி.பீ. சமரவீர</td><td>ரூ.117,832.00</td><td>2024.06.28</td></tr>
</table></td>
</tr>
<tr>
<td>11. நி.பி. 371 இற்கமைய வெளியிடப்பட்ட பணிகுறித்த இடைக்கால கட்டுநிதி பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.</td>
<td>நி.பி. 371 இற்கமைய பணிகுறித்த கட்டுநிதி பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல பிரிவுகளையும் அறிவுறுத்தியுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டளவில் ஒரு மாதம் விஞ்சிய தீர்க்கப்படாத பணிகுறித்த கட்டுநிதி காணப்படவில்லை.</td>
</tr>
<tr>
<td><u>இரண்டாம் பகுதி</u><br><br>01. திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிரந்த பயிற்சிகளின் எண்ணிக்கை 50% இற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.</td>
<td><u>2023 ஆண்டு</u><br>1. 2023 ஆண்டு வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023இற்கமைய பயிற்சி வாய்ப்புகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டதனால் பயிற்சிகள் குறைக்கப்பட்டன.<br><br><u>2025 ஆண்டு</u><br>I. 2025 ஆண்டு வருடாந்த பயிற்சித் திட்டத்திற்கு அமைய திட்டமிடப்பட்டவாறு பயிற்சி வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>2025 ஆண்டுக்கான உள்நாட்டு பயிற்சித்திட்டத்தில் உள்ளடங்கும் பயிற்சிகளின் எண்ணிக்கை -18, 2025 ஆண்டு அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகளின் எண்ணிக்கை - 15<br><br>II. டிசம்பர் மாதம் தொடர்பாக அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தித்வா அனர்த்த நிலைமை காரணமாக ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது.<br>III. அலுவலர்களின் தேவைகளின் அடிப்படையில் அடிக்கடி பயிற்சித் திட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கமைய ஒட்டுமொத்தமாக 83% ஆன பயிற்சி வாய்ப்புக்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | 2026 ஆண்டு<br>I. 2026 ஆண்டுக்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>II. தற்போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன. |
| 02. சகல அலுவலர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பித்திருக்கவில்லை. | 2025 ஆண்டுக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பிக்க வேண்டிய அலுவலர்கள் சகலரும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பித்துள்ளார்கள். 2026 ஆம் ஆண்டுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை 2026.06.30 ஆம் திகதிக்கு முன்னர் மத்தியநிலைப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமைக்கு தகவல்களை தரவேற்றம் செய்யுமாறு அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது. |

..............................................

சரோஜா சாவித்ரி போல்ராஜ் (பா.உ.)

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்.

Mrs. Saroja Savithri Paulraj
Hon. Minister of Women and Child Affairs
Ministry of Women and Child Affairs
6th Floor, Sethsiripaya, 2nd Stage,
Battaramulla.